காவல் துணை ஆணையர், தலைமையிடம், மதுரை மாநகர் அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை:M.பாஸ்கரன்

ந.க.எண்.பி2(2)/8748/48/2020, நாள்:14.09.2020.

மநாகர கா.ஆ.எண்.1311/2020.

சிறுதலைப்பு : காவல் - மதுரை மாநகரம் - பணியமைப்பு – மதுரை மாநகர காவல் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு. ப.மோகன்ராஜ் (த/பெ. (காலஞ்சென்ற) திரு பகவதிமுத்து, ஆய்வாளர் (தொ.நு)) என்பவரது தற்காலிக பணியினை வரன்முறைப்படுத்தி ஆணையிடுவது – தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த் துறை, நாள்:02.03.2016.
2. தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.041769/ சி.ஏ.ஆர் 1/2016, நாள்:08.04.2016.
3. தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.041769/ சி.ஏ.ஆர் 1/2016, நாள்:21.12.2017.
4. அரசாணை எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த் துறை, நாள்:23.01.2020

*****

**ஆணை:**

மதுரை மாநகர காவல் அலுவலகத்தில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு. ப.மோகன்ராஜ் (த/பெ. (காலஞ்சென்ற) திரு பகவதிமுத்து ஆய்வாளர் (தொ.நு)) என்பவர், அரசாணை எண்.989உள்(காவல் -15)துறை, நாள்:21.10.2002 மற்றும் தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.170533/சி.ஏ.1/2012, நாள்:05.03.2013-ன்படி, கருணை அடிப்படையில் தற்காலிகமாக கணினி விபர பதிவாளராக விருதுநகர் மாவட்ட காவல் அலுவலகத்தில் கடந்த 30.04.2013 முற்பகல் அன்று பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார். இவரது தற்காலிக கணினி விபர பதிவாளர் பணியினை, அரசாணை நிலை எண்.220, உள் (காவல்-15) துறை, நா்:18.02.2016 மற்றும் தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.175817/A&R-1/2007, நாள்:14.03.2016-ன்படி, கடந்த 30.04.2013 முற்பகல் முதல் கணினி விபரப் பதிவாளர் பணிவரன்முறைப்படுத்தி, விருதுநகர் மாவட்ட காவல் அலுவலக ஆணை ந.க.எண்.அ1(3)/582/13198/2016 (மாவட்ட ஆணை எண்.896/2016) நாள்:05.07.2016-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

3) மேலும், தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.179367/NGB 2(2)/2019, நாள்:13.09.2019–ன்படி மேற்படி கணினி விபர பதிவாளர், இளநிலை உதவியாளராக பணி மாற்றம் செய்யப்பட்டு, விருதுநகர் மாவட்ட காவல் அலுவலகத்திலிருந்து மாறுதலில் வரப்பெற்று கடந்த 07.11.2019 (முற்பகல்) அன்று இவ்வலுவலகத்தில் பணிக்கு அறிக்கை செய்துள்ளார். இவரது மூலக்கோப்பினை பரிசீலனை செய்ததில், மேற்படி இளநிலை உதவியாளரின் தகப்பனார் திரு பகவதிமுத்து, ஆய்வாளர் (தொ.நு) என்பவர் கொடைக்கானல், காவல் தொலைதொடர்பு

பிரிவில் பணிபுரியும் போது கடந்த 16.10.1999 அன்று மரணமடைந்துள்ளார். அன்னாரது மனைவி திருமதி மோகனா என்பவர் தனது மகன் திரு ப.மோகன்ராஜ் என்பவருக்கு கருணை அடிப்படை பணிநியமனம் வேண்டி 08.11.2001 அன்று மனு சமர்பித்துள்ளார்.

3) மேற்கண்ட மறைந்த ஆய்வாளர் (தொ.நு) அவர்களின் வாரிசுதாரர் மூன்று வருடங்களுக்குள் மனு சமர்பித்துள்ளார். அன்றைய தேதியில் தனியர் இளநிலை உதவியாளர் பதவிக்குரிய கல்வி தகுதியான 10 வகுப்பு (மார்ச் 2000) தேர்ச்சி பெற்றுள்ளார். மேலும் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழின் மெய்தன்மை அரசு தேர்வுகள் இயக்ககம், சென்னை இணையதளத்தில் சரிபார்க்கப்பட்டுள்ளது.

4) பார்வை-2-ல் காணும் தலைமையலுவலக குறிப்பாணையில், 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government orders) தேவைபடாத, தங்கள் கட்டுபாட்டின் கீழ் பணிபுரியும் அலுவலர்களின் பணியினை, நியமன அலுவலர்கள் பணிவரன்முறைப்படுத்தும்படியும், பார்வை-3-ல் காணும் தலைமையலுவலக குறிப்பாணையில் கணினி விவரப்பதிவாளர் பதவியிலிருந்து பணிமாறுதல் முறையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் உள்ள இளநிலை உதவியாளர் பதவிக்கு பணிநியமனத்துடன் கூடிய பணி வரன்முறைக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெறத் தேவையில்லை எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

5) தற்போது பார்வை-4-ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெறுபவர்களுக்கு ஓராண்டிற்குள் பணிவரன்முறை செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட மறைந்த சார்பு ஆய்வாளரின் மனைவி, அரசு ஊழியர் இறந்த மூன்று ஆண்டுக்குள் மனு சமர்பித்துள்ளதாலும், மனு சமர்பித்த நாளன்று தனியர் இளநிலை உதவியாளர் பணி நியமனத்திற்கு தேவையான 10-ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளதாலும், மேற்குறிப்பிட்டுள்ள தலைமையலுவலக குறிப்பாணைகளின்படி, திரு. ப.மோகன்ராஜ் என்பவரது, தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை, அவர் பணிக்கு அறிக்கை செய்த நாளான 07.11.2019 அன்று முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

ஒம்/M.பாஸ்கரன்
காவல் துணை ஆணையர்
தலைமையிடம், மதுரை மாநகர்

பெறுநர்

திரு. ப.மோகன்ராஜ், இளநிலை உதவியாளர், மாநகர காவல் அலுவலகம், மதுரை மாநகர்.
கல்: காவல்துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை -04.
நகல் : P1, P1(4) மற்றும் B1(3) உதவியாளர்கள்.
நகல் : காவல் ஆணை புத்தகம்.

//உ.ந.உ.ப.அ//

முதுநிலை நிர்வாக அதிகாரி,
மதுரை மாநகர்.